










எம்.ஜி.ஆர்

காலப்பேழை


bevpax
CENTRAL BANK OF INDIA



‘பாரத ரத்னா’

புரட்சித் தலைவர், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்



புரட்சித் தலைவி அம்மா அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்

எடப்பாடி K. பழனிசாமி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009

தேதி 9.9.2018

அணிந்துரை

தரணியில் சிறந்த தமிழ்நாடு, தகைசார்ந்த தலைவர்கள் பலரைக் கண்டிருக்கிறது. அதில் சின்னஞ்சிறு வயதில் படிப்பைத் தொலைத்து, வருவாய் ஈட்ட நாடக நடிகனாய் பணியாற்றி, இளமையில் வறுமையைக் கடந்து, வாழ்க்கையில் புகழ்மிக்க கதாநாயகனாக வளர்ந்து, உயர்ந்த செல்வ செழிப்பையும் உச்சக்கட்ட புகழையும் அடைந்த, மக்கள் மனதில் அசைக்க முடியாத இடத்தைப் பிடித்து, அவர்தம் இதயங்களில் இன்றும் குடிகொண்டு, கோலோச்சிக் கொண்டிருக்கும் மாபெரும் தலைவர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அன்னாரின் இளமைக்கால நினைவுகள், கலைத்துறை நிகழ்வுகள், அரசியல் நிகழ்ச்சிகள், மக்களுக்கு ஆற்றிய அரும்பணிகள் பற்றிப் புகழும் சிந்தனைகள் ஆகியவற்றைக் கண்கூடாகக் காணும் வகையில் காட்சிப்படங்களாக அச்சிட்டு, எழில்மிளிரும் வரலாற்றுப் பெட்டகமாக வடிவாக்கி, "காலப்பேழை" எனும் தலைப்பில் ஒளிப்படத் தொகுப்பு நூலாக, செய்தி மக்கள் தொடர்புத் துறை அழகுடன் உருவாக்கித் தந்துள்ளது.

" நாடென்ன செய்தது நமக்கு
எனக் கேள்விகள் கேட்பது எதற்கு
நீ என்ன செய்தாய் அதற்கு
என நினைத்தால் நன்மை உனக்கு"

என்று பாடி மக்களைத் தட்டி எழுப்பிய "பாரத ரத்னா", மாண்புமிகு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழுக்குப் பெருமை சேர்க்கும் சேர்க்கும் வகையில், மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா, ஆண்டு முழுவதும் கொண்டாடப்படும் என்று, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, அவர்தம் விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம், மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவினை, மாண்புமிகு அம்மா அவர்களின் வழி நடக்கும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மிகச் சிறப்பாக ஆண்டு முழுவதும் கொண்டாடி, மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பெயருக்கு மேலும் புகழ் சேர்த்தது.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாக்கள் மூலம், இதுவரை நடைபெற்ற (கன்னியாகுமரி மற்றும் சென்னை மாவட்டம் நீங்கலாக) 30 மாவட்டங்களில் மொத்தம் 5,397 கோடியே 52 லட்சம் ரூபாய் செலவில், 8,11,481 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், 5,127 கோடியே 11 லட்சம் ரூபாய் செலவில், 2,329 திட்டப் பணிகளை தொடங்கி வைத்தும், 5,712 கோடியே 90 லட்சம் ரூபாய் செலவில், 3,200 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் மக்கள் பணிகளை செயல்படுத்தி வருகின்றோம். இதயதெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணம் போல, மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் முடிவுற்ற திட்டப்பணிகளை மக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தும், மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான நலத்திட்ட உதவிகளை வழங்கியும், மகத்தான மக்கள் பணிகளை மேற்கொண்டோம்.

தமிழ்நாடு அரசின் சார்பில் இத்தகு சீரோடும், சிறப்போடும் கொண்டாடப்படும் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவின் ஓர் அங்கமாக ''காலப்பேழை'' என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள இந்த ஒளிப்பட தொகுப்பு நூல், ''மாண்புமிகு புரசித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய அரசியல் ஆளுமை,'' ''சீர்மிகு பெருமக்களுடன் புரட்சித் தலைவர்'', ''தாய் குலத்தின் தலைமகன்'', ''தமிழ்க் காவலர்'', ''குழந்தைகளின் காவலர்'', ''எழுத்தும் பேச்சும்'', ''அள்ளிக் கொடுத்த வள்ளல்'', ''நாடகம்'', ''மக்கள் திலகம்'', ''பரிசும் பாராட்டும்'', ''என்றென்றும் எம்.ஜி.ஆர்''. ஆகிய பதினோறு தலைப்புகளில் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை நேரே பார்ப்பது போல அழகிய ஒளிப்படங்களைக் கொண்டு, படித்தவர் முதல் பாமர மக்கள் வரை உணர்வுப் பொங்க பார்த்து, மகிழ்ந்து, அறிந்து கொள்ளும் வகையில் பாங்குடன் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூலை பொலிவோடும் புதுமையோடும் உருவாக்குவதில் மிகச்சிறப்புடன் பணியாற்றிய தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, அரசு செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் ஆகியோருக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

''பாரத ரத்னா'' டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் கலைத்துறை, அரசியல் ஆகியவற்றில் தடம் பதித்து மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ள வரலாற்றுப் புகைப்படங்கள் அடங்கிய ''காலப்பேழை'' ஒளிப்படத் தொகுப்பு நூலை, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் பார்த்து, படித்து பயன்பெற்றிட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

K. பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

எம்.ஜி.ஆர் காலப்பேழை

வ.எண்.	தலைப்பு		பக்கம் எண்
1.	அரசியல் ஆளுமை	.....	07
2.	சீர்மிகு பெருமக்களுடன்	.....	43
3.	தாய்க்குலத்தின் தலைமகன்	.....	76
4.	தமிழ்க் காவலர்	.....	87
5.	குழந்தையின் காதலர்	.....	115
6.	எழுத்தும் பேச்சும்	.....	123
7.	அள்ளிக் கொடுத்த வள்ளல்	.....	131
8.	நாடகம்	.....	150
9.	மக்கள் திலகம்	.....	162
10.	பரிசும் பாராட்டும்	.....	257
11.	என்றென்றும் எம்.ஜி.ஆர்	.....	271



பொதுவாகவே எனக்கு அரசியலைப் பொறுத்தவரையில் சோர்வே உண்டாகிவிட்டது. அத்தகைய நிலையில்தான் அமரர், பேரறிஞர் அண்ணா அவர்களின் 'பணத்தோட்டம்' என்ற புத்தகத்தைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. படித்தேன்; பல முறை படித்தேன்; கொஞ்சம்கொஞ்சமாகத் தொடர்பு ஏற்பட்டது; அண்ணாவோடு அல்ல, அவருடைய கொள்கைகளோடு, எனது கேள்விகளுக்கு காந்திய வழியில் இன்னமும் நான் வைத்துள்ள முழு நம்பிக்கையின் அடிப்படையில் நான் கேட்ட கேள்விகளுக்கு பேரறிஞர் அண்ணாவிடமிருந்து என் உள்ளம் ஏற்றுக்கொண்ட பதில்கள் நிறையக் கிடைத்தன. 'நான் ஏன் பிறந்தேன்'.

பேரறிஞர் அண்ணா அவர்களை எனக்கு அண்ணனாக. ஆசானாக, வழிகாட்டியாகப் பெறும் கிடைத்தற்கரியதொரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர்தான் நடிகமணி திரு டி.வி. நாராயணசாமி அவர்கள்.

– எம்.ஜி.ஆர்.



நாட்டிற்காக உழைப்பதற்கே அண்ணா பிறந்தார்
பொது நலத்தில் தானே நாள்முழுக்கக் கண்ணாயிருந்தார்
ஏற்றுக்கொண்ட பதவிக்கெல்லாம் பெருமையைத் தந்தார்
தன் இனிய குடும்பத்திற்கோ வறுமையைத் தந்தார்



சட்டசபைத் தேர்தல் பரப்புரை, சேலம் - 1966



வீட்டு மாடியில் பத்திரிகையாளர்களுடன் சந்திப்பு





தேர்தல் பரப்புரை - 1966

பதிவு எண்: எம். 7828 17-2-67 [விலை 20 காசு] சமதி வார இதழ்

தமிழக வாக்காளர்களுக்கு எம். ஜி. ஆர். வேண்டுகோள்

என் வணக்கத்திற்குரிய தாய்க்குலமே!

பெரியோர்களே! வாக்காளப் பெருமக்களே!

தேர்தலுக்கு முன்னும் நான் உங்களை எல்லாம் நேரில் சந்திக்கத் துடித்தேன்; ஆனால், கொடுமைக்கு ஆளாகி படுக்கையிலே கிடக்கிறேன்.

என்னைத் தேடிவந்த மரணம் ஓடிவிட்டது; அதை விரட்டியது உங்கள் அன்புதான்; பாசம்தான்!

உங்கள் இல்லங்களுக்கெல்லாம் வர இருந்தேன்; இயலவில்லை; இப்போது உள்ளங்களைக் கேட்கிறேன்!

இது மருத்துவமனையிலிருந்து நான் விடுக்கும் தாழ்மையான வேண்டுகோள்.

நாளை தேர்தல் நாள்—


யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கடைசியாக ஒரே ஒரு கணம் சிந்தியுங்கள்—

உங்களால் உருக்கப்பட்டு, உங்களால் வாழ்ந்து கொண்டிருக்கும் நான் உங்கள் காலடியில் மண்டியிட்டுக் கேட்பது இது ஒன்றே என்றுதான்!

மறந்து விடாதீர்கள்!



ஆசிரியரும், வெளியிடுபவரும் கே. சோமசுந்தரம், 155, காயிதே மில்லத் சாலை, சென்னை-14. அச்சிடுபவர்: கே. சண்முகம், கலைமணி ஆர்ட் பிரஸ், 157, ஆர்மேனியன் தெரு, சென்னை-26.





1967 ல் சுடப்பட்ட போது இராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர், சென்னை பொது மருத்துவமனையில் எம்.ஜி.ஆர். சிகிச்சை பெற்ற வார்டு, தற்போது 'எம்.ஜி.ஆர்.' வார்டு என்று அழைக்கப்படுகிறது!

1967ல் அறிஞர் அண்ணா முதல்வர் ஆவதற்கு உதவிய வரலாற்றுச் சிறப்புமிக்க விளம்பரம்.





1967 - சட்டசபை தேர்தலில் போட்டியிடுவதற்காக மருத்துவமனையிலிருந்து விண்ணப்பப் படிவத்தில் எம்.ஜி.ஆர் கையொப்பமிடுகிறார்.

The New York Times.

Feb 21, 1967 - Page-11

Like His Films, Tamil's Politics Draw the Fans

By KASTURI RANGAN
Special to The New York Times

MADRAS, India, April 20 — An old movie, now being revived in theaters in Tamil Nadu, has a scene in which the hero comes bouncing down the stairs three steps at a time, swinging a stick and singing: "If only I can order, and my order is carried, the poor in the world never will cry."

The hero is M. G. Ramachandran, "M.G.R." to millions of his adoring fans. He is also the 60-year-old leader of a mass-based political party, the All-India Anna Dravida Munnetra Kazhagam—in English, the Dravidian People's Party. His fans, believing that he will live up to his screen image in real life, led the voters of the state of Tamil Nadu to polling booths to insure the victory of his nominees in last month's parliamentary elections.



The New York Times

M. G. Ramachandran in costume for a movie filmed in Madras, India.

The New York Times.

Copyright, 1933, by The New York Times Company.

Feb 10, 1967 - Page-2

Movie Idols Star in Indian Election Campaign

By JOSEPH LELYVELD
Special to The New York Times

MADRAS, India, Feb. 7 — A touch of California has entered the election campaign in Madras, with the major parties vying to associate themselves with movie stars.

M. G. Ramachandran, "the Tamil Errol Flynn," famed for his roles in "The Gypsy Kind" and "Ali Baba and the Forty Thieves." In what was certainly the major event of the campaign in Madras, he was nearly lost to the federation. On Jan. 12 he was shot in the neck and critically wounded by another film star, M. R. Radha, who had long been typed as a villain. Mr. Radha then shot himself in the neck in an unsuccessful suicide attempt.

Opposition Group Has Edge in Madras Because Actor Supporting It Was Shot

Mr. Ramachandran is always referred to in the Tamil press as "Makkal Thilagam," which means "idol of the masses." So angry was the reaction to the attempt on his life that policemen had to use tear gas to disperse the crowds assembled outside his hospital.

Though Mr. Ramachandran is likely to be in the hospital for a month more at least, his candidacy in the Feb. 15-21 election has not been withdrawn, and he is certain to win. The bullet is still lodged in his neck and his doctors have ordered him to refrain from talking, but he is very much in the campaign. A photograph of him in the hospital, a heavy cast around his neck, has been reproduced by the thousands.

* நன்றி! *

பேரன்பு கொண்டோரே!

100 நாட்கள் கழித்து 21-4-67 வெள்ளிக்கிழமை முதல், சத்யா ஸ்டுடியோவில், 'அரசகட்டளை' படப்பிடிப்பில் கலந்துகொள்கிறேன்.

நாள்தோறும், 12 மணி நேரத்திற்குமேல் உழைத்துக் கொண்டிருந்த என்னை, கொடுமையின் தாக்குதல், 100 நாட்களாக உழைப்பிடமிருந்து பிரித்து வைத்திருந்தது.

ஜனவரி 12-ம் நாள் அந்தி சாயும் நேரத்திலிருந்து, இலட்சோப லட்சம் உள்ளங்கள், "நான் பிழைப்பேனா? மீண்டும் எந்தக் குறையுமில்லாமல் வெளிவருவேனா? படங்களில் நடிப்பேனா?" என்று தங்களுடைய ஏக்கங்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தன.

"எப்படியும் பிழைத்து முன்போல் நான் நலம் பெற்று வரவேண்டும்" என்பதற்காக, இந்தியத் துணைக்கண்டத்திலும், கடல் கடந்த நாடுகளிலும் இருந்தெல்லாம், என்னை வாழ்த்தியும், ஆலயங்களில் வழிபாடுகள் நடத்தியும், எனக்கு உயிர்ச்சக்தி அளித்துவந்தார்கள்.

என்னைப் பெற்ற தாய் இப்போது இல்லை;



ஆனால் நாடெங்கும் உள்ள தாய்மார்கள், என்னை, தான்பெற்ற பிள்ளையாகக்கருதி, என்னுடைய மறுபிழைப்புக்காகத் தாய்மை உணர்வோடு வேண்டிக் கொண்டார்கள்.

என்னுடைய நலத்துக்காக வேண்டிக் கொண்டிருக்கும் அன்னையரே! அருமை நண்பர்களே! ஆயிரமாயிரம் சோதரர்களே! உங்கள் நல்வாழ்த்தால், நான் பூரண நலம்பெற்று-என் கலைப்பணியைத் துவங்கும்போது தங்களின் பாதங்களில் என் சிரம் தாழ்த்தி, நன்றியையும் வணக்கத்தையும் காணிக்கையாக்குகிறேன்.

அன்பன்,

எம். ஜி. ராமச்சந்திரன்.


தமிழக மக்கள் தந்த பேராதரவிற்கு எம்.ஜி.ஆர் நன்றி கூறுகிறார்.



அண்ணா தி.மு.கவை 1972-ல் எம்.ஜி.ஆர் தொடங்கி வைத்தார்



அண்ணா தி.மு.க உறுப்பினர் அட்டை - 1972



சட்டப் பேரவை உறுப்பினர் அட்டை - 1972



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்

உறுப்பினர் பதிவு விண்ணப்பத்தாள்.

பொதுச்செயலாளர், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தலைமை நிலையம், 156, லாயிட்ஸ் சாலை, சென்னை-14.

அன்புடையீர்,

இதில் கையொப்பமிட்டுள்ள நாங்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோளையும், நோக்கங்களையும் திட்டங்களையும் ஒப்புக்கொண்டு, மேற்படி கழகத்தில் உறுப்பினராகச் சேரவிரு இதன் மூலம் விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம். கழகத்தின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடப்பதாக நாங்கள் உறுதி கூறுகிறோம். எங்களைக் கழகத்தின் உறுப்பினர்களாகப் பதிவு செய்து அதற்கான உரிம சீட்டுக்களை அனுப்பக் கோருகிறோம்.

புதிய இணையா ?
பழைய இணையா ? _____

கிளைக்கழக ஊர் _____ தொகுதி _____ வட்டம் _____ மாவட்டம் _____

வரிசை எண். 1	உறுப்பினர் பெயர் [தெளிவாக எழுதுக] 2	தகப்பனார் பெயர் 3	வயது 4	பால் 5	தொழில் 6	முகவரி 7	முன்பு உறுப்பினரா ? 8	கையொப்பம் 9	10
1	எம்.ஜி.[illegible]	கோபாலன்	56	ஆண்	வேடிகன்	சாமாவரம் தோட்டம்	DMK	எம்.ஜி.[illegible]	
2	கே.ஏ. திருஞ்ஞானம்	அருளுசுவாமி	40	ஆண்	வழக்கறிஞர்	143, லாயிட்ஸ் ரோடு	"	கே.ஏ. திருஞ்ஞானம்	
3	S.D. சோமசுந்தரம்	தங்கமாணிக்கம்	48	"	வியாபாரி	12, தெரு தெரு, பிராட்வே	தி.மு.க.வில்	S.D. சோமசுந்தரம்	
4	முரு. சந்தி	முருகசாமி	48	ஆண்	வியாபாரி	1, பாரதி மோதா தெரு கி. திருவல்லிக்கேணி	தி.மு.க.வில்	முருகசாமி	
5	கு. செல்லையா	குழந்தைவேல்	35	"	வியாபாரி	வீடுக்கடை P.O. பேரா பூரணிதிருவள்ளூர்	"	கு. செல்லையா	
6	S.R. இராஜா	ராமையா	35	"	சமையல்	தலைமைச் செயலகம்	"	S.R. இராஜா	
7	கே. சொக்கலிங்கம்	கேசவராமானுஜம்	34	"	வாணிபம்	3/2. வேப்பேரி சென்னை 1	தி.மு.க.வில்	கே. சொக்கலிங்கம்	
8	இரா. மோகனசுந்தரம்	A. இராகவலு	34	"	வழக்கறிஞர்	29. பாரதி நகர் பழவந்தாங்கல் சென்னை-11.	"	இரா. மோகனசுந்தரம்	
9	ஜேப்பியார் (ஜே.பி.)	C. தேவ சகாயம்	33	"	இயற்பொறியாளர்	5-11-214 தெரு வடிவேலம்மன் சென்னை-21	திமு	ஜேப்பியார்	
10	N.S. இளங்கோ	நாராயணசாமி	49	"	சட்டம்	2241. மானோஜியப்பன் வீதி தஞ்சாவூர்	திமு	N.S. இளங்கோ	
11	எம் கே. சுந்தரன்	குழந்தைவேல் இறந்துவிட்டார்	37	"	வழக்கறிஞர்	காந்தி சாலை, திருச்சானூர்	திமு	எம் கே. சுந்தரன்	
12	[illegible]	பிச்சை முத்து	38	"	வியாபாரம்	13, மேகப் சாலை 3வது தெரு	"	[illegible]	

மதுரைச் தேரடி சென்னை




தொண்டரென்றால் யார்?

தொண்டரென்றால் யார்?
ஒரு அரசியல் கட்சியின் அஸ்திவாரமும் அவன்தான் -
மைய மண்டபமும் அவன்தான்.
மாளிகையின் முகப்பும் அவன்தான்-
படிகளும் அவன்தான்
படியேற்றி விடுபவனும் அவன்தான்-
படியிலிறக்குபவனும் அவன்தான்-
கொடிக்கம்பம் நடுபவனும் அவன்தான்-
கொடியைக் காப்பவனும் அவன்தான்-
அடிபடுபவனும் அவன்தான்-
அடிமட்டத்திலிருப்பவனும் அவன்தான்-
"உனக்காக என் உயிர்" என்பதறிவான்-
"எனக்கென்ன தருவாய்? "- எனக்கேட்டறியான்.
கொள்கையின் உயிர்மூச்சு அவன்!
அவன்-உயிர்; கட்சி-உடல்!
அவன் அசைந்தால்தான் கட்சி இயங்கும்!
அவன் அடங்கிவிட்டால் கட்சி முடங்கிவிடும்!


- எம்.ஜி.ஆர் (தென்னகம் 18.10.1975)







சென்று வா மகனே! வென்று வா!



ஒன்றே அன்புகம்! வளர்க அண்ணா தி.மு.க! வாழ்க புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.


தென்னாட்டு காந்தி அறிஞர் அண்ணாவின் அன்புத்தம்பியே!
தமிழக மக்கள் திலகமே!! என் அன்பு அண்ணனே!!! தமிழக அமைச்சரவையில் உள்ள ஊழல்களை வெளிக்கொண்டு புரட்சித்தலைவரே புரட்சியை நிலைநாட்ட தஞ்சை தரணிக்கு வரும் தங்களை தஞ்சை மக்கள் சார்பாகவும் என குடும்பத்தின் சார்பாகவும் வருக-வருக என அன்புடன் வரவேற்கிறேன்.


புரட்சித்தலைவரே! அண்ணா தி.மு.க. வளர்ச்சிக்காக தங்கள் உயிரையும் தியாகம் செய்ய தயாராக இருக்கும் குறைந்தது 500 பேர் களிடம் தங்களுடைய படம் அருகே இரத்தத்திலகம் வாங்கி உள்ளேன். நம் கழக வளர்ச்சிக்காக தாங்கள் இடும் ஆணையை கடமை, கண்ணியம், கட்டுப் பாட்டுடன் நிறைவேற்றுவேன். சந்தர்ப்பம் ஏற்பட்டால் உயிர்தியாகம் செய்ய தயார் என்பதின் சின்னமாக மேலே இரத்த கையொப்பம் இட்டு உள்ளேன்.

வணக்கம்


இரத்த கையொப்பம்

இங்ஙனம்,
அன்புள்ள,
தஞ்சை மணி (வெங்கடேசன்)
12வது வட்டம்,
அண்ணா தி.மு.க. தஞ்சை.





வீரத் திருமகனுக்கு வெற்றித் திலகம்



தமிழக முதல்வரின் சிறப்புச் செய்தி...

எல்லா வாழ்வகத்தும் தெய்வங்களே!

அமரர் அண்ணாவின் சீரிய கொள்கைகளான ஜாதி, மத, வர்க்க வேற்றுமைகளற்ற, "எல்லோரும் ஓர் குலம்", "ஒன்றே குலம் ஒருவனே தேவன்", "எல்லோரும் ஓர் நிலை, எல்லோரும் ஓர் விலை" என்ற அறவழியில் நல்லாட்சி அமைய உங்கள் துணையுடன் தமிழகத்தில் தற்சிப்பொறுப்பினை ஏற்கின்றேன். உயர்திரு ஓமந்தூரார், முதலமைச்சர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா போன்ற மேதைகள் இருந்த ஆட்சி செய்த இடத்தில் உங்களை மட்டும் நம்பியே அமருகிறேன்.


அமரர் அண்ணாவின் கொள்கைக் கொடியை ஏந்தி எனக்கு இதுவரை துணை நின்றது போல் இந்த மாபெரும் பொறுப்பிலும் நிறைவேற்றும் போதும் எனக்குத் துணை நிற்க வேண்டுமாய் தமிழகத்து மக்களாகிய உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

எம்.ஜி.ஆர்

30-6-77

(எம்.ஜி.ராமச்சந்திரன்)



எல்லா முதல்வர்களும் கோட்டையில் பதவி ஏற்றால் இவர் அண்ணாசாலை நாற்சந்தியிலேயே மேடை போட்டு மக்கள் பார்க்க வாழ்த்துக்கூற பதவியேற்ற முதல்வர்


அண்ணாயிசம்

பகுத்தறிவு மூலம் சமதர்மம் பொருளாதார சமத்துவத்தை மனித உணர்வின் அடிப்படையில் உருவாக்குவது அண்ணாயிசம்.

- எம்.ஜி.ஆர்

அண்ணா சாலையில் எம்.ஜி.ஆரை வாழ்த்தும் கடல் போன்ற மக்கள் கூட்டம்





முதலமைச்சர் எம்.ஜி.ஆர் மற்றும் அமைச்சரவை 30.06.1977

நிற்பவர்கள் : 1. ராஜா முகம்மது 2. செல்வி பி.டி. சரஸ்வதி 3. எஸ். இராகவானந்தம் 4. பி. சௌந்திரபாண்டியன் 5. க. காளிமுத்து 6. சி. பொன்னையன் 7. பி. குழந்தைவேலு

அமர்ந்திருப்பவர்கள் : 1. சி. அரங்கநாயகம் 2. எஸ். இராமச்சந்திரன் 3. கே. நாராயணசாமி முதலியார் 4. எம்.ஜி, இராமச்சந்திரன் 5. பிரபுதாஸ் பி. பட்வாரி 6. நாஞ்சில் கி. மனோகரன் 7. ஜி.ஆர். எட்மண்ட் 8. இராம வீரப்பன்



அண்ணா சாலையில் எம்.ஜி.ஆரை வாழ்த்தும் கடல் போன்ற மக்கள் கூட்டம்!



தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் ஆந்திராவிலிருந்து கிருஷ்ணா நதிநீரை கொண்டு வந்து, ஆந்திராவின் வறட்சியைப் போக்கி, சென்னைக்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தார்.

TAMIL NADU ORDINANCE No. 10 OF 1980.

AND WHEREAS the State Government have after careful consideration, taken a policy decision to abolish all the posts of part time Village Officers on grounds of administrative necessity and to introduce a system of whole time officers to be in charge of Village administration;

Revenue Department

G.O.MS.No.2600 **Dated : 18.11.1980**

the posts of part time Village Officers in the State have ceased to exist. in the place of the part-time Village Officers. under section 4 (1) Officer for one or more revenue villages. Under section 4(6) of the Ordinance the posts of Village Administrative Officers can aso be created for the purpose - In G.O.Ms.No.2577. Revenue. Dt.14.11.80 the posts of Village Administrative Officers have also been created. The District Revenue Officers and Additional Collectors have also been athorised to sanction additional number of posts as may be necessary.

Personnel and Administrative reforms (Personnel. M) Dept.

G.O.Ms.No.1238 **ORDER:** Dated: 23.12.80

Village Administratrive Officers in the Tamil Nadu Ministerial Service may be classified as 'Technical' for the purpose of direct recruitment.

No.A3/69522/82-2 **Dated : 31.7.82**


OFFICE OF THE SPECIAL COMMISSIONER AND COMMISSIONER OF REVENUE ADMINISTRATION.

CHEPAUK, MADRAS - 5

12,550 posts have been sanctioned on a permanent basis. It will be necessary that the Collectors have to from groups for each VAO and notify the jurisdiction of each one of

முன்சீப் கர்ணம் ✗ VAO ✓

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் எச்சங்களாயிருந்த முன்சீப், கர்ணம் போன்ற பரம்பரைப் பதவிகளை ஒழித்து கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தார்.



-தமிழரசு




எம்.ஜி.ஆர் முன்சீப் அமைப்பை நீக்கி, கிராம நிருவாக அலுவலரை அனைத்து கிராமங்களிலும் தமிழ்நாட்டில் நியமித்தார்.
இது எம்.ஜி.ஆரின் புரட்சிகரமான சட்டமாகும்.




எம்.ஜி.ஆர் வாங்கிய
'தமிழ் அண்ணா' கப்பல்,
ஜப்பான் - 1985





எம்.ஜி.ஆர்
தமிழ்நாடு செய்தித்தாள் காகித
ஆலையை புகளூரில் தொடக்கி
வைத்தார் - 1986



தினமணி எம்.ஜி.ஆர். களஞ்சியம்






அமெரிக்க ஏடுகளான 'டைம்'– 'லைஃப்' ஆகியவற்றின் நிருபர்களுக்கு மருத்துவமனையிலிருக்கும் எம்.ஜி.ஆர். பேட்டியளிக்கிறார்.

– சமநீதி 10.03.1967









தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவுவிழாவையொ
20.9.79 அன்று சென்னை சீரணி அரங்கத்தில் நடைபெற்ற சிறப்பு
கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் புரட்சி நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்கள் தந்தைபெரியார் நூற்றாண்டு விழா நினைவுமலரினை
வெளியிட்டார்கள்.




காவல் அலுவலருக்கு எம்.ஜி.ஆர் பதக்கம் அணிவிக்கிறார்



எம்.ஜி.ஆர் பாதுகாப்பு அதிகாரி விவேகானந்தராஜ் அவர்களுக்குப் பதக்கம் அணிவிக்கிறார் - 1979



தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பப் புரட்சிக்குத் தொடக்க விழா



எம்.ஜி.ஆர் அமைச்சரவை - 9.6.1980

நிற்பவர்கள் : 1. எம். விஜயசாரதி 2. கோமதி சீனிவாசன் 3. எஸ்.என்.இராஜேந்திரன் 4. ராஜா முகம்மது 5. பி. குழந்தைவேலு 6. எஸ். இராகவானந்தம் 7. எச்.வி.ஹண்டே 8. எஸ். திருநாவுக்கரசு 9. முத்துசாமி


அமர்ந்திருப்பவர்கள் : 1. சி. பொன்னையன் 2. சி. அரங்கநாயகம் 3. எஸ்.டி. சோமசுந்தரம் 4. எஸ். ராமச்சந்திரன் 5. எம். ஜி. ராமச்சந்திரன் 6. பிரபுதாஸ் பி. பட்வாரி 7. வி.ஆர். நெடுஞ்செழியன் 8. கே.ஏ.கிருஷ்ணசாமி 9. இராம வீரப்பன் 10. கா.காளிமுத்து





நியூயார்க், புருக்ளின் மருத்துவமனையில் எம்.ஜி.ஆர் - 1984

பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டே – 1984 சட்டப்பேரவைத்
தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று சரித்திரம் படைத்தார்



ஏழைகளின் பங்காளர் எம்.ஜி.ஆர்.





இந்தியாவின் முதல் விண்வெளி வீரரான ராகேஷ் சர்மாவுக்கு எம்.ஜி.ஆர் கேடயத்தை வழங்குகிறார்.





நந்தனத்தில் 1000 வீட்டுவசதி தொகுப்புக் குடியிருப்பினைத் தொடங்கி வைக்கிறார் - 1978



அனைத்திந்திய வானொலியில் விவசாயிகளுக்கான நலத்திட்டங்களை எம்.ஜி.ஆர் தொடங்கி வைக்கிறார்






எம்.ஜி.ஆர் - 1965ல் இலங்கையில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு நகரங்களுக்குச் சென்றார். எம்.ஜி.ஆரைக் காண யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கில் 1.5 இலட்சம் மக்கள் திரண்டனர்.



நான் யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற மாபெரும் மக்கள் கூட்டத்தை கண்டதே இல்லை! எம்.ஜி.ஆர். இலங்கை மக்களின் இதயத்திலும் வீற்றிருக்கிறார்!

உச்ச நீதிமன்ற நீதிபதி
ஹென்ரி டபுள்யூ தம்பையா



இலங்கைத் தமிழருக்கு ஆதரவளிக்கும் வகையில் உண்ணா நோன்பு இருக்கும் எம்.ஜி.ஆர் - 1983



பேரறிஞர் அண்ணா அமெரிக்காவிலிருந்து திரும்பியபோது விமான நிலையத்தில் வரவேற்பு அளித்த எம்.ஜி.ஆர்



சாதி, மதம், மொழி, எந்தப் பிரிவும் நம்மைத்தொட முடியாத அளவுக்கு உயர்ந்து நின்று நமது சுதந்திரத்தைக் காப்போம்!



பெரியாருடன் எம்.ஜி.ஆர்.

பெரியாரின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களின்போது ஈரோடு மாவட்டத்திற்கு பெரியார் மாவட்டம் என்றும்
பூந்தமல்லி நெடுஞ்சாலையை ஈ.வெ.ரா. நெடுஞ்சாலை என்றும் பெயரிட்டார்
பெரியாரின் வழிகாட்டுதலுக்கேற்ப தமிழ் எழுத்துக்களை மாற்றியமைத்தார்.



பேரறிஞர் அண்ணாவுடன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்



குடியரசுத் தலைவர் கியானி ஜெயில்சிங்குடன் எம்.ஜி.ஆர்



குடியரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டியுடன் எம்.ஜி.ஆர் - 1978



பிரதமர் இந்திரா காந்தியுடன் எம்.ஜி.ஆர் - 1981




அவரது ஈகைக் குணத்தையும் கருணையையும் அனைவருக்கும் காட்டினார். ஒரு முதலமைச்சராக, அனைத்து சக்திகளையும், வளங்களையும் மாநிலத்தின் முக்கியத் தேவைகளுக்காக ஒருமுகப்படுத்தினார்.

- ராஜிவ் காந்தி - பிரதமர்



பிரதமர் மொரார்ஜி தேசாய்க்கு
எம்.ஜி.ஆர் மாலை அணிவிக்கிறார் - 1979



பிரதமர் சரண்சிங்குடன் எம்.ஜி.ஆர்




துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன் ராமுடன் எம்.ஜி.ஆர்





ஆந்திராவின் முதலமைச்சர் என்.டி.ஆருடன் எம்.ஜி.ஆர்.
எம்.ஜி.ஆரை, என்.டி.ஆர் எப்போதும் 'குருகாரு' என்றே அழைப்பார்!




வி.பி.சிங்குடன் எம்.ஜி.ஆர்



பெருந்தலைவர் காமராசர் என்னுடைய தலைவர்
பேரறிஞர் அண்ணா என்னுடைய வழிகாட்டி

(பெருந்தலைவர் காமராசரைப் பற்றி எம்.ஜி.ஆர்)



1984இல் விருதுநகர் மாவட்டத்திற்கு பெருந்தலைவர்
காமராசரின் பெயரை அவரின் நினைவாக சூட்டினார்.


மக்கள் என் பக்கம் என்று அவர் சொல்வது போல
எம்.ஜி.ஆர் பக்கம் மக்கள் சக்தி இருப்பதைப்
பல கூட்டங்களில் கண்டிருக்கிறேன்

நியாயத்தின் பக்கமே என்றைக்கும்
எம்.ஜி.ஆர் நிற்கிறார்!

– பக்தவத்சலம்



தமிழ்நாட்டின் முதலமைச்சர் பக்தவத்சலத்துடன் எம்.ஜி.ஆர்



"ராஜ்காட்" அண்ணல் காந்தியடிகள் சமாதியில் எம்.ஜி.ஆர்



மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதி பாசுவுடன் எம்.ஜி.ஆர்



தனது கட்சியைத் தொடங்கும் முன்னர் இராஜாஜியிடம் ஆசி பெறுகிறார்.

தனித்துப் போராடுகிறார் எம்.ஜி.ஆர். அவரை அப்படி விட்டு விடாதீர்கள். அர்ச்சுனனைப்போல் அவரை வெற்றி வீரர் ஆக்குங்கள்!


- மூதறிஞர் ராஜாஜி



தென் மாநில முதலமைச்சர்கள் மாநாடு 16-7-1978 அன்று சென்னையில் நடைபெற்றது.
மாநாட்டில் கலந்து கொண்ட ஆந்திர முதலமைச்சர் சென்னாரெட்டி, கருநாடக முதலமைச்சர் தேவராஜ் அர்ஸ்,
தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.,கேரள முதலமைச்சர் ஏ.கே.அந்தோனி, புதுவை முதலமைச்சர் எஸ்.ராமசாமி.



கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டேவுடன் எம்.ஜி.ஆர்




கேரள முதலமைச்சர் கருணாகரனுடன் எம்.ஜி.ஆர்




எம்.ஜி.ஆருடன் இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் - 1980



போப் ஜான் பாலுடன் எம்.ஜி.ஆர் - 1986



இலங்கையின் தந்தை செல்வா, என்கிற
திரு.செல்வநாயகம், (நிறுவனர், டியூஎல்எப்)
ராமாவரத்தில் உள்ள எம்.ஜி.ஆரின் இல்லத்தில்
அவரைச் சந்தித்தார்.



டியூஎல்எப்பின் தலைவர் திரு அமிர்தலிங்கம்
எம்.ஜி.ஆரைச் சந்தித்தார்.




இலங்கையின் பிரதமர் டட்லி சேனநாயக்காவுடன் எம்.ஜி.ஆர் - 1965



1960 சென்னைக்கு வருகை தந்த சீனப் பிரதமர் சௌ-என்-லாயை கலைஞர்களுடன் சந்தித்த எம்.ஜி.ஆர்.




சிங்கப்பூர் மேயருடன் எம்.ஜி.ஆர் -1978



ரஷ்யக் கலைஞருக்கு திருக்குறளையும் தந்தச் சிலையையும் பரிசளிக்கிறார் - 1967



சோவியத் அரசின் அழைப்பில் எம்.ஜி.ஆர். மாஸ்கோ சென்றபோது லெனின் சதுக்கம் முன்பு- 1973




மதுரை பொது மருத்துவமனையில் தமிழ்நாட்டின் முன்னாள் உள் துறை அமைச்சரான கக்கனுடன் எம்.ஜி.ஆரின் உணர்வு பூர்வமான சந்திப்பு. கக்கனுக்கு, எம்.ஜி.ஆர் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் வீடு ஒதுக்கி மாத நிதி உதவியை, கக்கன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு வழங்க ஆணையிட்டார்.



ஏழை - எளிய மக்கள் முன்னேற்றம் பெற வேண்டுமென்று பெருந்தலைவர் காமராஜர் விரும்பினார். அந்த வழியில்தான் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அதற்கான செயல் வடிவத்தைப் பிற்பட்டோர் வருமான வரம்பின் மூலம் தந்துள்ளார். காமராஜர் கண்ட கனவை நனவாக்கும் வகையில், முதலமைச்சர் எம்.ஜி.ஆர். செயல்பட்டு வருகிறர். லஞ்சம், ஊழலற்ற நல்லாட்சி நடத்தும் முதலமைச்சர் எம்.ஜி.ஆரை பாராட்ட வேண்டும்.

- கக்கன்

பம்பாய் சண்முகானந்தா அரங்கில் எம்.ஜி.ஆர்



எம்.ஜி.ஆர், நாவலவன். பம்மல் நல்ல தம்பி



புகழ்பெற்ற ஓவியர் ஆர்.கே.லட்சுமண் (நடுவில் இருப்பவர்) – எம்.ஜி.ஆருடன்



எம்.ஜி.ஆர்., எம்.கே.ராதா, பிரேம் நசீர் மற்றும் ராஜ்குமார்

உலகிலேயே அதிக படங்களில் கதாநாயகனாக நடித்தவரான பிரேம் நசீர் (ஏறத்தாழ 600 மலையாளப் படங்களில் நடித்துள்ளார்). அவர் எம்.ஜி.ஆரை சேட்டா (பெரியண்ணா) என்றே அழைப்பார்.



சிந்தனைச் சிற்பி சி.பி.சிற்றரசுவுடன் எம்.ஜி.ஆர்.



"போர்வாள்" நாளிதழின் ஆசிரியர் சி.பி.சிற்றரசு
சிலையைத் திறந்து வைத்தார் எம்.ஜி.ஆர்.




இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் எஸ்.ஏ டாங்கேயுடன் எம்.ஜி.ஆர்.
மகாராஷ்ட்டிராவின் பாசிச எதிர்ப்பு மாநாடு - 1975.
1975 கருத்தரங்கில் எம்.ஜி.ஆர். - மாநிலக் கட்சிகள் தேசிய நீரோட்டத்தில் சேர வேண்டும் என மொழிந்தார். பின்னர் 1976ல் தனது கட்சியின் பெயரை அஇஅதிமுக என பெயர் மாற்றம் செய்தார்.



இந்திய கம்யூனிஸ்ட் தலைவர்
எம். கல்யாணசுந்தரத்துடன்
எம்.ஜி.ஆர்



பிரபல இயக்குநர் சாந்தாராமுடன் எம்.ஜி.ஆர் - 1979




ஜி.கே.மூப்பனாருடன் எம்.ஜி.ஆர்



எம்.எஸ்.சுப்புலட்சுமியுடன் எம்.ஜி.ஆர்




எம்.ஜி.ஆரின் வேண்டுகோளையேற்று, முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் கே.பி. சுந்தராம்பாளுக்கு, மேலவையில் இடமளித்தார்
1958 முதல் 1964 வரை கே.பி. சுந்தராம்பாள் மேலவை உறுப்பினராக இருந்தார்.
தமிழக அரசியலில், மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் திரையுலகப் பிரமுகர் கே.பி. சுந்தராம்பாள் ஆவார்!




பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கேப்டன் ஆசிஃப் இக்பால் மற்றும்
இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் சுனில் கவாஸ்கருடன் எம்.ஜி.ஆர்



இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் கபில் தேவுடன் எம்.ஜி.ஆர்




குத்துச் சண்டை வீரர்கள் முகம்மது அலி, ஜிம்மி எல்லிஸ் மற்றும் எம்.ஜி.ஆர், - 1980




உலக கராத்தே நிபுணர் ஹன்ஷி கோகன் யமகுச்சியுடன் எம்.ஜி.ஆர் - 1978

எம்.ஜி.ஆரால் யமகுச்சியின் பெயரும், கராத்தே கலையும் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரவியது.

எம்.ஜி.ஆர்,
நாவலர் நெடுஞ்செழியன்,
டி.கே.சீனிவாசன்,
பேரறிஞர் அண்ணா





1978 - செப்டம்பர் 4ல் அண்ணா தொழில்நுட்ப
பல்கலைக்கழகம் தொடக்க விழா
முதலமைச்சர் - எம்.ஜி.ஆர். குடியரசுத் தலைவர் - சஞ்சவீரெட்டி,
ஆளுநர் - பிரபுதாஸ் பட்டுவாரி, பேராசிரியர் - சிவலிங்கம்





எம்.ஜி.ஆருடன் பி.ஜி.பி. குழுமத் தலைவர், பழனி ஜி.பெரியசாமி


SUN

TO REMOVE CCS-CAS ANOMALIES

Guests of 'Sun' and 'Radha'

TUMULTUOUS WELCOME TO M.G.R. & SAROJA

SWRD portrait unveiled

I'LL GO HOME, SAYS SPEAKER

Newsletter ban for local bodies




MGR, Saroja Devi visit Northern & Eastern Provinces

AT BATTICALOA

கொழும்பு ரத்மலானா ஏர்போர்ட்டில்
எம்.ஜி.ஆர் - 1965



கடவுளிடம் சென்று உதவி கேட்டால்
மறுநாள் தான் கொடுப்பார்
ஆனால் எம்.ஜி.ஆரிடம் சென்று உதவி கேட்டால்
அப்போதே கொடுப்பார்

– சரோஜா தேவி






மகனை இழந்த மூதாட்டியின் சோகத்தில் பங்கேற்றுத் தேற்றும் எம்.ஜி.ஆர்.




அன்னை தெரசாவுடன் எம்.ஜி.ஆர் – 1984



ஏழை எளியோர்
துயரம் போக்கும்
செயலே எந்தன் சேவை
– எம்.ஜி.ஆர்





நான் உங்கள் வீட்டுப் பிள்ளை

இது ஊரறிந்த உண்மை!



அன்னையைத் தொழும் எம்.ஜி.ஆர்.

பெற்றெடுத்து பெயர் கொடுத்த அன்னையல்லவோ
பேசுகின்ற தெய்வம் என்பது உண்மையல்லவோ




"இவன்கிட்டே யார் மோதினாலும், அவங்கதான் தோற்பார்களே தவிர, நான் கும்பிடற காளி இவனைக் கைவிடமாட்டா"

எம்.ஜி.ஆரின் அன்னை சத்யபாமாவின் வார்த்தைகள்



ஒருதாய் மக்கள் நாமென்போம் – ஒன்றே எங்கள் குலமென்போம்






1978-ம் ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் எம்.ஜி.ஆர் அவர்கள்
கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளை பார்வையிட்டார்.


எல்லாம் எனக்குள் இருந்தாலும்
என்னை தனக்குள் வைத்திருக்கும்
அன்னை மனமே என் கோயில்
அவளே என்றும் என் தெய்வம்



ஒவ்வொரு ஆணும், தான்தான் தனது மனைவியைக் காக்கின்றான் என்ற தப்பான முடிவுக்கு வந்துவிடுகிறான்... ஆனால், உண்மையை உணருவோமானால் ஆண், ஒரு பெண்ணின் உடலைக் காண்கின்றான்! பெண்ணோ (மனைவியோ) கணவனுடைய உள்ளத்தையும் சேர்த்துக் காக்கின்றாள்... என்பதை உணருவோம் – எம்.ஜி.ஆர்




பத்துத் திங்கள் சுமந்தாளே! அவள் பெருமைப்படவேண்டும்!
உன்னைப் பெற்றதனால், அவள் மற்றவராலே போற்றப்படவேண்டும்!





பாலூட்டும் அன்னை அவள் நடமாடும் தெய்வம்



கொடைக்கானல் மகளிர் பல்கலைக்கழகத் திறப்பு விழாவில் அன்னை தெரசா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் ஆச்சரியப்படும் விதமாக, அப்பல்கலைக்கழகத்திற்கு, 'அன்னை தெரசா' பல்கலைக்கழகம் எனப் பெயரிட்டார் எம்.ஜி.ஆர். – 1984



மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல்

குத்ரோத்காரி திருவள்ளுவராண்டு 2015, மாசித் திங்கள்
19-ஆம் நாள் வெள்ளிக் கிழமையன்று


மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்களால்

பல்கலைக் கழக கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது

கொடைக்கானல்,
2-3-1984

செ.அரங்கநாயகம்,
தமிழக அரசு கல்வி அமைச்சர்

அன்னை தெரசா பல்கலைக்கழகத்தின் அடிக்கல்











உலகத் தமிழ் மாநாட்டுப் பேரணியை பிரதமர் இந்திரா காந்தி மற்றும் எம்.ஜி.ஆர் பார்வையிடுகின்றனர். – 1981

தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணமுண்டு
அன்பே அவனுடைய வழியாகும் அமிழ்தம் அவனுடைய மொழியாகும்






1981-ல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில்
உலகத் தமிழ்ச் சங்கத்திற்கு கால்கோள் மற்றும் தமிழ்த் தாய் சிலையை நிறுவினார்.



பாவேந்தர் பாரதிதாசன்

தமிழுக்கும் அமுதென்று பேர்! – அந்த
தமிழ், இன்பத் தமிழ், எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்! – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!




பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்


போர்ப் படைதனில் தூங்கியவன் வெற்றி இழந்தான்
உயர் பள்ளியில் தூங்கியவன் கல்வி இழந்தான்

காலமாற்றத்தைச் சொன்னான்
காலத்தையே மாற்று என்றும்
சொன்னான்.

பட்டுக்கோட்டை பற்றி எம்.ஜி.ஆர்



கவிஞர் வாலி
பொன்மனச் செம்மலே!
என்
பொழுது புலரக்
கூவிய சேவலே!
உனக்கென்று
நான் எழுதிய
முதல் வரியில்தான்
உலகுக்கு
என் –
முகவரி
தெரிய வந்தது!
நான் பாடிய பாடல்களை
நீ பாடிய பிறகுதான்
நாடு பாடியது...
ஏழை எளியவர்களின்
வீடு பாடியது!



மருதகாசி


கண்ணை நம்பாதே உன்னை ஏமாற்றும்
உன்னை ஏமாற்றும் நீ காணும் தோற்றம்
உண்மையில்லாதது
அறிவை நீ நம்பு, உள்ளம் தெளிவாகும்!
அடையாளம் காட்டும், பொய்யே சொல்லாதது!

கண்ணதாசன், புலமைப்பித்தன், முத்துலிங்கம்
மூவரையும் அரசவைக் கவிஞர்களாக்கி தமிழுக்கு பெருமை சேர்த்தவர் எம்.ஜி.ஆர்




கண்ணதாசன், எஸ்.எஸ்.ஆருடன் ராஜா தேசிங்கு பப்பிடிப்பில்

திரையுலகின் அனைத்து துறைகளிலும் நுட்பமான அறிவு அவருக்கு உண்டு, எனக்கு மிகப்பெரிய நெருக்கடி வந்தபோது நான் கேட்காமலேயே அவரே என்னை தேடிவந்து, தேவையான உதவி செய்து, என்னை காப்பாற்றியவர் எம்.ஜி.ஆர், இப்போது மட்டும் அல்ல எப்போதும் இதை நான் மறக்கமாட்டேன்!



கவிஞர் முத்துலிங்கத்திற்கு விருது வழங்கும் எம்.ஜி.ஆர்

தமிழுக்குப் பல்கலைக் கழகம் ஒன்றை
தமிழ்நாட்டு முதல்வர்களில் இவர்தான் தந்தார்
தாய்க்குலத்தின் அன்பை இவர் பெற்றதைப் போல்
தலைவர்களில் எவருமிங்கு பெற்றதில்லை!



கவிஞர் புலமைப்பித்தன்

கருணையின் வடிவில் வந்தான்
காலத்தை வென்று நின்றான்

முகவரி எனக்கும் தந்தான்
தர்மத்தின் சாட்சியாகத்
தரணியின் உயர்ந்து நின்றான்

தலைவருக்கு தமிழாயுதம் தந்த தமிழ்ப் புலவர்கள்

எம்.ஜி.ஆருக்கு பாடல்கள் எழுதிய தமிழ்ப் புலவர்கள்

பாபநாசம் சிவன்
பாரதிதாசன்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
பஞ்சு அருணாச்சலம்
கு.மா.பாலசுப்பிரமணியன்
பூவை செங்குட்டுவன்
முத்துக்கூத்தன்
கவியரசு கண்ணதாசன்
மாயவநாதன்
மருதகாசி
மு.கருணாநிதி
சுரதா
சுரபி
வாலி
வைத்தியநாத அய்யர்
புலமைப்பித்தன்
விந்தன்
ரண்டார்கை
கா.மு.ஷெரீப்
காளிமுத்து
ஆத்மநாதன்
ஆலங்குடி சோமு
அவினாசி மணி
முத்துலிங்கம்
நா.காமராசன்
சி.ஏ.லட்சுமணதாஸ்
கே.பி.காமாட்சி
உடுமலை நாராயணகவி
நெல்லை அருள்மணி
சுந்தர வாத்தியார்
பாலதாஸ்
நரசிம்மன்
குயிலன்
குமாரதேவன்
நாமக்கல் கவிஞர்
மக்களன்பன்
கே.டி.சந்தானம்
டி.எஸ்.நடராஜன்
முத்துகிருஷ்ணன்
இரா.பழனிச்சாமி
தியாகராஜன்
ரோஷனராபேகம்

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

கல்வி - தமிழ் வளர்ச்சி: தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் - பெரியார் ஈ. வெ. இராமசாமி நூற்றாண்டு விழாவில் பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளல் - ஆணை வெளியிடப்படுகிறது.

கல்வித் துறை

அரசாணை நிலை எண் : 1875 நாள் : 19.10.1978.

ஆணை

மேலே கூறிய தமிழக முதல்வர் அறிவிப்பிற்கிணங்கவும், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரின் பரிந்துரையை ஏற்றும் அரசு இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு சீர்திருந்திய தமிழ் எழுத்துக்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென ஆணை பிறப்பிக்கின்றது. இச்சீர்திருந்திய தமிழ் எழுத்து வடிவங்கள், அனைத்து அரசு அலுவலகங்களிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் உள்ளாட்சித் துறை வரம்பிற்குட்பட்ட நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலும் , தமிழக அரசின் வரம்பிற்குட்பட்ட வாரியங்கள், கழகங்கள், நிறுவனங்களிலும் பின்பற்றப்பட வேண்டும்.

தமிழ் மொழியில் வெளிவரும் நாளிதழ்களும், பருவ ஏடுகளும், தமிழ் புத்தகம் வெளியிடுபவர்கள், அச்சிடுபவர்களும் இவ்வாணையில் சொல்லப்பட்ட சீர்திருந்திய தமிழ் எழுத்து வடிவங்களைக் கையாள வேண்டுமென அரசு பரிந்துரை செய்கின்றது.

எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குநர், தமிழக அரசு வெளியீடுகளிலும், அரசிதழ்களிலும் மற்றும் தமிழில் அச்சிடப்படும் எல்லா இதழ்களிலும் சீர்திருந்திய எழுத்து வடிவங்களை உடனடியாகக் கையாள வேண்டுமென பணிக்கப்படுகின்றார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தமிழ் எழுத்துருக்களை எம்.ஜி.ஆர் சீர்திருத்தம் செய்தார் 1978

அ. ஒ. ஐ பாடத் திட்டங்களை ஒழுங்குபடுத்தினார்.



முன்பு	தற்பொழுது
ணை	ணை
ரு	றா
ண	னா
ணை	ணை
ல	லை
ள	ளை
ன	னை


எம்.ஜி.ஆர். காலம்போல்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு



மொழிப் போர் தியாகிகள்
நினைவு அஞ்சலிக் கூட்டத்தில்
எம்.ஜி.ஆர்







எ.கோவிந்தசாமி, என்.வி.என்.நடராஜன், வி.ஆர்.நெடுஞ்செழியன்

இந்திய அரசு, எம்.ஜி.ஆருக்கு 'பத்மஸ்ரீ' விருதை அவருடைய கலைப் பணிக்காக 1960இல் வழங்கியது. ஆனால், தமிழுக்காக இவ்விருதை ஏற்க அவர் மறுத்துவிட்டார்! பின்னர், அவர் தமிழ்நாடு முதலமைச்சரானார், மொழிப் போர் போராட்டத்தில் கலந்து கொண்ட மொழிப் போர் தியாகிகளுக்கு எம்.ஜி.ஆர் ஓய்வூதியம் வழங்க ஆணையிட்டார்.

விழிபோல் எண்ணி நம் மொழி காக்க வேண்டும்








‘செந்தமிழ் சொற்பிறப்பியல் அகர முதலி’
திட்டத்திற்கு தனி அலுவலராக
ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களைத்
அரசு சார்பாக நியமித்தார், எம்.ஜி.ஆர்.

நான் வணங்கிப்போற்றி, எனது மரியாதைக்குரியவராக நான் எனதுள்ளத்தில்
ஏற்றுக்கொண்டுள்ள சேலம் சட்டக்கல்லூரி மேனாள் தமிழ்ப் பேராசிரியர், மதுரைப்பண்டிதர்,
நெல்லைப்புலவர், சென்னைப் புலவர் கலைத்தலைவர் (எம்.ஏ) அன்புமிகு
திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்களைச்
சந்திக்கும் அரிய பேற்றினைப் பெற்றேன்.

– எம்.ஜி.ஆர்.

பிறந்த நாடே சிறந்த கோயில்
பேசும் மொழியே தெய்வம்



தமிழ்நாடு அரசு 1981இல் குமரிக் கண்டம் என்னும் ஆவணப் படத்துக்கு நிதியுதவி வழங்கியது. இந்த ஆவணப் படம் எம்.ஜி.ஆரின் தனி கவனத்துடன் தயாரிக்கப்பட்டது. இதனை ப. நீலகண்டன் இயக்கினார். இப்படம், மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் திரையிடப்பட்டது. இப்படம், பண்டைய மற்றும் தற்கால லெமூரியா கண்டத்தைப் படம் பிடித்துக் காட்டும் முக்கியமான ஆவணமாக அமைந்தது. இது குமரிக் கண்டத்தில் அமைந்த நகரங்களின் தோட்டங்கள், கலைகள். பண்பாடுகள், இசை நடனம் ஆகியவற்றை காட்சிப்படுத்துவதாக அமைந்தது.



தமிழுக்குப் பல்கலைக்கழகம் ஒன்றை தமிழ்நாட்டு முதல்வர்களில் இவர்தான் தந்தார்
தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை 1981ல் நிறுவினார்.

தமிழ்ப் பல்கலைக் கழகத் தொடக்க விழா

(1981 செப்டம்பர் 15, 16, 17 தேதிகளில்)

பேரன்புடையீர்,

வணக்கம்.

1981 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15 ஆம் நாள் (துன்மதி-திருவள்ளுவர் ஆண்டு 2012 ஆவணித் திங்கள் 30 ஆம் நாள்) செவ்வாய்க்கிழமை மாலை 5-00 மணிக்கு தஞ்சாவூர் விளையாட்டரங்கத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொடக்கவிழா நடைபெறும்.

தமிழ்நாடு ஆளுநர்
மேதகு திரு. **சாதிக் அலி** அவர்கள்
தமிழ்ப் பல்கலைக் கழகத்தினைத் தொடங்கிவைக்க இசைந்துள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு
திரு. **எம். ஜி. ஆர்.** அவர்கள்
விழாவிற்குத் தலைமை ஏற்பார்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழகப் புலங்கள் திறப்புவிழா

நிகழ்ச்சி நிரல்

16-9-1981

புதன்கிழமை


காலை 9—00 மணி

மங்கள இசை

தலைமை ..	மாண்புமிகு திரு. **செ. அரங்கநாயகம்,** தமிழக கல்வி அமைச்சர்.
கலைப்புலம் அடிக்கல் நாட்டலும் துவக்கவுரையும்	மாண்புமிகு திரு. **கே. இராசாமுகமது,** தமிழக நீர்ப்பாசன அமைச்சர்.
சிறப்புரை	திரு. **டி. கே. சீனிவாசன்,** துணைத் தலைவர் மாநில திட்டக் குழு.
கவடிப்புலம் அடிக்கல் நாட்டலும் துவக்கவுரையும்.	மாண்புமிகு திரு. **ஜி. பி. சங்கர் ராவ்,** கர்நாடக மாநில கல்வி அமைச்சர்.
சிறப்புரை ..	டாக்டர் **சா. வே. சுப்பிரமணியன்,** உறுப்பினர், வல்லுநர் குழு.
வளர் தமிழ்ப் புலம் அடிக்கல் நாட்டலும் துவக்கவுரையும்	மாண்புமிகு திரு. **பி. வெங்கட்ராம் ரெட்டி,** ஆந்திர மாநிலக் கல்வி அமைச்சர்.
சிறப்புரை ..	மாண்புமிகு திரு. **கா. காளிமுத்து,** தமிழக வேளாண்மைத் துறை அமைச்சர்.
மொழிப்புலம் அடிக்கல் நாட்டலும் துவக்கவுரையும்	மாண்புமிகு திரு. **ப. குழந்தைவேலு,** தமிழக உள்ளாட்சித்துறை அமைச்சர்.
சிறப்புரை ..	டாக்டர் **மா. நன்னன்,** உறுப்பினர், வல்லுநர் குழு.
அறிவியல் புலம் அடிக்கல் நாட்டலும் துவக்கவுரையும்	மாண்புமிகு திருமதி **ரேணுகா அப்பாத்துரை,** பாண்டிச்சேரி கல்வி அமைச்சர்.
சிறப்புரை	திரு. **வ. செ. குழந்தைசாமி,** உறுப்பினர், வல்லுநர் குழு.

மாலை கலை நிகழ்ச்சிகள்


2



தமிழ்நாடு எனும் எழுத்துரு போல், தமிழ்ப்பல்கலைக் கழகக் கட்டடங்களை வடிவமைத்தார் எம்.ஜி.ஆர்.



தஞ்சாவூரில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் திறந்து வைத்தார். 16-09-1981



தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வரைபடத்துடன் எம்.ஜி.ஆர்.
கட்டுமானப் பணிக்கான ஆலோசனைக் கூட்டம்



1981-ல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் இடம் பெற்ற கண்காட்சியில் எம்.ஜி.ஆர் உரையாற்றுகிறார்.




1981-ல் மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் இடம் பெற்ற கண்காட்சியினை,
எம்.ஜி.ஆர் மற்றும் குண்டுராவ் பார்வையிடுகின்றனர்.





பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டி, கல்கத்தாவில்
பாரதியார் சிலையை எம்.ஜி.ஆர் திறந்து வைத்தார் - 1982.




பாரதியாரின் இளவல் திரு சி. விசுவநாத அய்யர் அவர்களுக்கு
மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்குகிறார்.





பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டி கல்கத்தாவில் பாரதியார் சிலையை எம்.ஜி.ஆர் திறந்து வைத்தார்.மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு உரையாற்றுகிறார். தமிழ்நாடு அரசும், மேற்கு வங்க அரசும் கல்கத்தா பாரதி தமிழ்ச்சங்கமும் இணைந்து விழாவினை நடத்தினர்




செந்தமிழ் நாட்டின் சிறந்த முதல்வராம் சந்தப்
புரட்சித் தலைவராம் - அந்தன் புகழ்ராம சந்திர
பூபன்பல் லாண்டு தகவுடனே வாழ்க தழைத்து
- திருமுருக கிருபானந்த வாரியார்

எம்.ஜி.ஆர் - கிருபானந்த வாரியார். 'பொன்மனச் செம்மல்' என்ற பட்டத்தை, கிருபானந்த வாரியார் எம்.ஜி.ஆருக்கு திருச்சியில் அளித்தார்.



முத்தமிழ் விருதுகள் வழங்கும் விழா

அமர்ந்திருப்போர் இடமிருந்து வலம் : 1. மு.வரதராஜன் (இலக்கியம்) 2. பம்மல் சம்பந்த முதலியார் (நாடகம்) 3. கே.பி.சுந்தராம்பாள் (இசை)
நிற்போர் இடமிருந்து வலம்: 1. எஸ்.வரலட்சுமி 2. எம்.ஜி.ஆர் 3. எஸ்.வி.சகஸ்ரநாமம் 4. எஸ்.எஸ். ராஜேந்திரன் 5. அசோகன் 6. எஸ்.டி.சுந்தரம்



டாக்டர். மு.வ. ஒருமுறை எம்.ஜி.ஆரை சந்தித்தபோது அன்புசெல்வி அறச்செல்வி என்ற இரு நூல்களை மாதவி மற்றும் கண்ணகியை மனதில் கொண்டு எழுதியது என சொல்லிக் கொடுத்தார். அடுத்த முறை இருவரும் சந்தித்தபோது எம்.ஜி.ஆர் மு.வ.விடம் நூல்களை படித்தேன் மாதவியின் மற்றும் மாதவியின குலத்தின் மீது படிந்துள்ள வரலாற்று களங்கத்தை இந்நூல் நீக்கும் எனச் சொன்னார்.
மு.வரதராஜன் இயற்கை எய்தியபோது அவரது வீட்டிற்குச் சென்று அஞ்சலி செலுத்தியது மட்டுமல்லாமல் மயானத்திற்கு எரியூட்ட சந்தன கட்டைகளைக் கொண்டு சென்று அஞ்சலி செலுத்தினார்.

தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை

அரசாணை நிலை எண்.371 நாள் 31.10.1986
தி.ஆ. 2017, அட்சய, ஐப்பசி 15.

பார்வை :

1. அரசு ஆணை நிலை எண்.2070, கல்வித்துறை. நாள் 2.12.71
2. அரசு ஆணை நிலை எண்.432, கல்வித்துறை, நாள் 10.3.81.
3. கல்வித்துறை கடிதம் எண்.13050/தவ1/81-1, நாள் 2.6.81.
4. அரசு ஆணை நிலை எண்.968 கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள்.21.5.82.
5. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.இ2/17386/82, நாள் 24.12.82.

ஆணை

அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழித் திட்டம் செம்மையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றப்பட மூவாண்டு ஆட்சிமொழி முனைப்புத் திட்டம் 1.4.81 முதல் ஐந்து அரசுத் துறைகளில் முதலாண்டில் செயல்படுத்த 10.3.81 ஆம் நாளிட்ட கல்வித் துறையின் அரசாணை நிலை எண். 432இல் ஆணையிடப்பட்டது. மேலும் பனிரெண்டு அரசுத் துறைகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்த 2.6.81ஆம் நாளிட்ட கல்வித் துறையின் அரசுக் கடிதம் எண்.43050/தவ1/81-1இல் ஆணையிடப் பட்டது. அரசு ஆணை நிலை எண்.968 கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 21.51.82இல் அனைத்து அரசுத் துறைகளிலும் ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டத்தை 1.4.82 முதல் விரிவுபடுத்தி ஆணையிட்டுள்ளது.

2. தற்பொழுது தமிழ் வளர்ச்சி இயக்குநர் தலைமைச் செயலகத் துறைகளும், மாநகராட்சிகளும் அரசின் சார்பு நிறுவனங்கள் பலவும் அரசுத் துறைகளோடு தொடர்ந்து ஆங்கிலத்திலேயே கடிதத் தொடர்பு கொண்டு வருகிறது என்றும், எனவே, தலைமைச் செயலகம், அரசின் துறைகள், சார்பு நிறுவனங்கள், மாநகராட்சிகள், வாரியங்கள், கழகங்கள், கூட்டுறவு இணையங்கள் அனைத்திலும் தமிழ்த் திட்டத்தை முழுமையாகச் செயற்படுத்த ஆட்சிமொழி மூவாண்டு முனைப்புத் திட்டத்தை விரிவுபடுத்திட அரசுக்குக் கருத்துரு அளித்துள்ளார்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்தினை ஏற்று ஆட்சிமொழி முனைப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் பொருட்டு, தலைமைச் செயலகத் துறைகளிலும், அரசு சார்பு நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள், கூட்டுறவு இணையங்கள் போன்ற அனைத்திலும் தமிழ்த் திட்டத்தை

உடனடியாகச் செயற்படுத்திட கீழ்க்காணும் வகையில் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

